நீதி அமைச்சின் சுற்றறிக்கை 1/2008(i)

எனது இல. : MOJ/E10/மே.நீ./2022
நீதி அமைச்சு
கொழும்பு 12.
2022 மே 06...

சகல மேல் நிதிமன்ற நீதிபதிகள்,
சகல மாவட்ட நீதிபதிகள்,
சகல நீதவான்கள்,
சகல தொழில் நியாயசபைகளின் தவிசாளர்கள் யாவருக்கும்,

<u>காவலாளிகளை சேவையில் ஈடுபடுத்தல் மற்றும் மேலதிக நேரத்துக்கு அங்கீகாரம் வழங்கல்.</u>

காவலாளிகளின் கடமை நேரங்கள் தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள 2017.11.28 ஆம் திகதிய 29/2017 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களையும் கவனத்தில் கொண்டு மேலுள்ள விடயம் தொட்பில் வெளியிடப்பட்டுள்ள 2008.02.11 ஆம் திகதிய நீதி அமைச்சின் 1/2008 ஆம் இலக்க சுற்றறிக்கை நீக்கம் செய்யப்படுவதுடன், அதற்குப் பதிலாக பின்வரும் புதிய ஏற்பாடுகள் 2022.05.05 ஆம் திகதி முதல் அமுலுக்குவரும்.

02. காவலாளி/ நீதிமன்ற பாதுகாப்பு அலுவலரின் கடமை நேரம் 12 மணி நேரமாகும் என்பதுடன், பிற்பகல் 6.00 மணி முதல் முற்பகல் 6.00 மணி வரை அல்லது முற்பகல் 6.00 மணி முதல் பிற்பகல் 6.00 மணிவரையாகும்.

2.1 காவலாளி/ நீதிமன்ற பாதுகாப்பு அலுவலர் ஒவ்வொரு வாரமும் 06 நாட்கள் சேவையாற்ற வேண்டும் என்பதுடன் ஞாயிறு மற்றும் அரசாங்க விடுமுறை தினங்களும் வழமையான கடமை நாட்களாக கருதப்படல் வேண்டும். அவர்களுக்கு வாரம் ஒரு நாள் ஓய்வு நாளாக உரித்தாகும்.

2.2 இரவு நேர காவல் கடமையை நிறைவேற்றுவதாயின் பகல் நேரத்திற்கு காவலாளி/ நீதிமன்ற பாதுகாப்பு அலுவலரின் சேவையைப் பெற்றுக் கொள்ளக்கூடாது.

03. 2015.07.29 ஆம் திகதிய நீதி அமைச்சின் சுற்றறிக்கை 04/2015 இற்கமைய சகல நீதிமன்றங்களுக்கும் இணைப்புச் செய்யப்பட்டுள்ள நீதிமன்ற பாதுகாப்பு அலுவலர்களை ஒரு அலகாக (ஒரு குழுமமாக) கருதி பாதுகாப்பைச் செய்துகொள்வதற்கு உச்சளவில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதுடன், மேற்படி நீதிமன்ற கட்டிடத்தொகுதிகளில் மற்றும் போதியளவு பாதுகாப்பு அலுவலர்கள் சேவையாற்றுகின்ற நீதிமன்றங்களில் பின்வருமாறு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

3.1 ஒரு நாளைக்கு சமமான காலப்பகுதியாக கொள்ளப்படும் சேவை முறை 03 அமுல்படுத்தப்படும் வகையில் காவலாளிகளை கடமையில் ஈடுபடுத்துவதாயின் அவர்களின் ஒவ்வொரு சேவை முறைக்கும் 08 மணி நேரம் உள்ளடங்கும் வகையில் ஒழுங்குபடுத்தல் வேண்டும்.

3.2 சேவை முறையின் கீழ் 08 மணி நேர சேவை முறை விதிக்கப்படுகின்ற அலுவலர் ஒருவர் சேவை முறை தொடர்ந்தும் நீடிக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களில் மேலதிக நேரத்துக்கு உரித்துப் பெற முடிவது 09 மணி நேர கடமைக்கு மேலதிகமாக நிறைவேற்றும் கடமைக்கு மாத்திரமாகும்.

04. மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு காவல் கடமைக்கு உரிய ஊழியர்கள் இல்லை எனின் மாத்திரம் மேலதிக நேர அடிப்படையில் அலுவலக சிற்றூழியர்களை காவல் கடமைகளில் ஈடுபடுத்தல் வேண்டும் என்பதுடன் அவர்களின் நிரந்தர பதவியின் கடமை நேரத்தை அடிப்படையாகக் கொண்டு மேலதிக நேரக் கொடுப்பனவுகளை பெற்றுக் கொடுக்க முடியும்.

05. அதற்கமைய நீதிமன்றங்களில் காவல் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஊழியர்களுக்கு பின்வருமாறு மேலதிக நேரக் கொடுப்பனவு செலுத்துவதை அங்கீகரிக்கின்றேன்.

5.1 காவலாளி/ நீதிமன்ற பாதுகாப்பு அலுவலர்களுக்கு ஒரு நாளைக்கு ஒரு சேவை முறைக்கு உச்சளவான மேலதிக நேரம் 03 மணித்தியாலங்களுக்கு உட்பட்டதாகவும், ஒரு மாதத்திற்கு உச்சளவாக 144 மணித்தியாலங்ளுக்கு உட்பட்டதாகவும், பகல் மற்றும் இரவு சேவை

முறைகளுக்கு 09 மணியத்தியாலங்களுக்கு மேல் மேற்கொள்ளும் கடமைகளுக்கு மேலதிக நேரக் கொடுப்பனவை செலுத்தல்.

5.2 காவலாளி/ நீதிமன்ற பாதுகாப்பு அலுவலர் ஆகிய எந்தவொரு ஊழியரும் இல்லை எனின், மேற்படி கடமைகளை நிறைவேற்றுவதற்காக சேவையில் ஈடுபடுத்தப்படும் சகல ஊழியர்களுக்கும் ஒரு மாதத்திற்கு உச்சளவாக 360 மணித்தியாலம் மேலதிக நேரம் செலுத்தல்.

5.3 காவலாளி/ நீதிமன்ற பாதுகாப்பு அலுவலர் ஆகிய ஒரு ஊழியர் மாத்திரம் இருப்பின், அவர் கடமையில் இல்லாத நாட்களில் காவல் கடமைகளுக்கு ஈடுபடுத்தப்படும் ஊழியர்களுக்கு ஒரு மாதத்திற்கு உச்சளவாக 160 மணித்தியாலம் மேலதிக நேரம் செலுத்தல்.

5.4 காவலாளி/ நீதிமன்ற பாதுகாப்பு அலுவலர் ஆகிய ஊழியர்கள் இருவர் இருப்பின் காவல் கடமையில் ஈடுபடுத்தப்படும் ஊழியர்களுக்கு ஒரு மாதத்திற்கு உச்சளவாக 40 மணித்தியாலம் மேலதிக நேரம் செலுத்தல்.

06. இதற்கென மேலதிக ஏற்பாடுகள் வழங்கப்பட மாட்டாது என்பதுடன், தற்போது காணப்படுகின்ற ஏற்பாடுகளின் வரையறைக்குள் இந்த செலவினங்களை முகாமைத்துவம் செய்துகொள்ளல் வேண்டும்.

**கையொப்பம் / எம்.எம்.பீ.கே. மாயாதுன்னே,**
செயலாளர்,
நீதி அமைச்சு.

பிரதிகள் :

01. செயலாளர், நீதிச் சேவைகள் ஆணைக்குழு
02. பிரதம நிதி அலுவலர், நீதி அமைச்சு